**செ.வெ. எண்: 447** **நாள்: 30.07.2012**

# செய்தி வெளியீடு

ஜனநாயகத்தின் ஒரு தூணாக விளங்கும் நீதி நிருவாகம் சிறப்புடன் செயல்படுவதற்கும், வழக்குத் தொடுத்துள்ள குடிமக்களுக்கு விரைந்து நீதி கிடைப்பதற்குத் தேவையான உட்கட்டமைப்பு மற்றும் பிற வசதிகளை நீதிமன்றங்களுக்கு வழங்குவதிலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு முன்னோடியாக விளங்கி வருகிறது.

அந்த வகையில், தமிழகத்தில் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் நீதிமன்றங்களுக்கென படிப்படியாக சொந்தக் கட்டடங்கள் கட்ட முன்னுரிமை அளித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள்.

அதன் அடிப்படையில், விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தில், குற்றவியல் நீதிமன்றம் - II தவிர இரண்டு விரைவு நீதிமன்றங்கள், இரண்டு சார்பு நீதிமன்றங்கள், இரண்டு மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் I என ஏழு நீதிமன்றங்கள், அரசு கட்டடங்களில் வெவ்வேறு இடங்களில் மிகுந்த இடப்பற்றாக்குறையுடன் செயல்படுவதைக் கருத்தில் கொண்டும், பொது மக்களின் வசதியையும் தேவையையும் கருத்தில் கொண்டும், கூடுதல் மாவட்ட நீதிபதி (விரைவு நீதிமன்றம்-1), கூடுதல் மாவட்ட நீதிபதி (விரைவு நீதிமன்றம் 2), முதன்மை சார்பு நீதிபதி மற்றும் கூடுதல் சார்பு நீதிபதி ஆகியோர் குடியிருப்பு வசதியின்றி உள்ளதைக் கருத்தில் கொண்டும் அனைத்து நீதிமன்றங்கள் மற்றும் நீதிபதி குடியிருப்புகள் அடங்கிய ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தினை திண்டிவனத்தில், திண்டிவனம் மெயின்ரோடு, ஜக்கம்பேட்டை கிராமத்தில் 8.15 ஏக்கர் நிலப்பரப்பில், 17 கோடியே 31 லட்சத்து 69 ஆயிரம் ரூபாய் செலவினத்தில் அமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9

நாள். 30.7.2012